Registered Number :
TN/MA/14/2018-2020
RNI No : TNTAM/2000/912
Date of publishing :
5th August 2018
Date of posting :
10, 11th August 2018
Posted at BPC, Madurai

கண் ஒளி

அரவிந்த் வெளியீடு

கண் நல விழிப்புணர்வு மாத இதழ்

ஆசிரியர்
டாக்டர்.ஜி.நாச்சியார்

ஆசிரியர் குழு
சித்ரா துளசிராஜ்
கோ. முருகராஜ்
திவ்யா ரமேஷ்

சந்தா பொறுப்பாளர்
ஜெ. பரிமளா


தொடர்புக்கு :
'கண்ஒளி'
அரவிந்த் கண்
மருத்துவமனை,
1, அண்ணாநகர்,
மதுரை – 625020

மின்னஞ்சல் :
kannoli@aravind.org

# கண் ஒளி

விழி 35 பார்வை 1 ஆகஸ்ட் 2018

## பெண்களின் உடல்நலனில் கவனம் தேவை



பெரும்பாலான குடும்பங்களில் பெண்கள்தான் தங்களது வீட்டிலுள்ள பெரியோர்கள், குழந்தைகள் மற்றும் கணவரின் உடல்நலனில் போதிய அக்கறை செலுத்துகின்றனர். அதே சமயம் தங்களது உடல்நலனில் இந்தப் பெண்கள் அக்கறை செலுத்துவதே இல்லை. எனக்கு உடல்நலனில் எந்தக்குறையும் இல்லை; நாள்முழுவதும் உழைப்பதால் நோய்கள் என்னை அண்டாது; சிகிச்சை, மருத்துவம் என ஓய்வு எடுத்துக்கொண்டால் என் குடும்பத்தினரால் ஒருநாள் கூட சமாளிக்க முடியாது எனப் பலவித பதில்களைக் கூறுவார்கள். பொதுவாகவே பெண்கள், தங்களுக்கென எதையும் செய்துகொள்வதில்லை. குடும்பத்தில் உள்ள பெண்களது உடல்நலனில் மற்ற அனைவரும் கவனம் செலுத்துவது மிக அவசியம். உடல்நலன் குறித்த பெண்களது இந்த அலட்சியம் நமது தமிழ்ச் சமூகத்தில் மட்டுமல்ல. பெரும்பாலான நாடுகளிலும் இதே நிலைதான். உலகெங்கும் ஆங்காங்கே நடத்தப்படும் கண் நலன் குறித்த ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிப்பது என்னவென்றால் பார்வைக் குறைபாடு உள்ளவர்களில் பெண்கள் அதிகம் உள்ளனர் என்பதும் மருத்துவப் பரிசோதனைகளைப் புறக்கணிப்பதில் பெண்கள் முன்னணியில் உள்ளனர். வருடத்திற்கு ஒருமுறை, சிரமம் பார்க்காமல், அலட்சியம் காட்டாமல் கண் பரிசோதனைகளுக்கு நம் குடும்பத்து பெண்களை அழைத்துச் செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள முயற்சிப்போம். நோயினால் பாதிக்கப்பட்ட பிறகு, நோய் முற்றியபிறகு சிகிச்சை எடுத்துக்கொள்வதைவிட தற்காப்பு நடவடிக்கைகளை எடுப்பதும் கண் குறைபாடுகள் ஆரம்ப நிலையில் இருக்கும்போது சிகிச்சை எடுப்பதும் மிக அவசியம்.


இந்த இதழில் மருத்துவக் காப்பீடுகள் பற்றியும் யூவியா நோய் குறித்தும் விரிவான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கண் சிகிச்சைக்கும் மருத்துவக் காப்பீடுகள் உதவுகின்றன என்பது பலருக்கு இதுநாள் வரையில் தெரியாமலிருக்கலாம். அவர்களுக்கு புரிதலை வழங்கும் வகையில் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது. பார்வையை இழந்த இளம்பெண் ஒருவர் தனது வாழ்வை எவ்வளவு துணிவுடன் எதிர்கொள்கிறார் என்பதைக் கூறும் நம்பிக்கைக் கதையும் இடம்பெற்றுள்ளது.

*- ஆசிரியர் குழு*

அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தரநிலைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன

# உலக தரத்திற்கு இணையான தயாரிப்புகள் வாங்கக்கூடிய விலையில்

மடங்ககூடிய மற்றும் மடங்காத உள்விழி லென்ஸ்கள்



கண்சொட்டு மருந்துகள்






## 74% பணியாளர்கள் பெண்கள்

- கண்மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் தயாரிப்பில் 20 வருடத்திற்கும் மேலாக அனுபவமிக்க நிறுவனம்.
- 2014-ம் ஆண்டிற்கான CNN-IBN சேனலின் "நாளைய நல்வாழ்விற்கான கண்டுபிடிப்புகள்" விருது பெற்ற நிறுவனம்.

TÜVRheinland®
EN ISO 9001 : 2008
EN ISO 13485 : 2012 / AC : 2012




CE 0197
மருத்துவ கருவிகளை ஐரோப்பிய நாடுகளில் விற்பதற்கான **CE** முத்திரை



aurolab
மேலும் தொடர்புக்கு
போன்:0452-3096 100
இ-மெயில்: info@aurolab.com
web:www.aurolab.com

# துளிர்க்கும் வாழ்க்கை

## நம்பிக்கையின் ஒளிக்கீற்று

உடல்நலனில் குறைபாடு உள்ள பலரும் தங்களது வாழ்வை எந்தத் தயக்கமுமின்றி எதிர்கொள்கின்றனர். மிக இயல்பாகவே தங்களுக்கு ஏற்படும் தடைக்கற்களைப் படிக்கட்டுகளாக மாற்றி வாழ்வில் வெற்றியடைகின்றனர். அப்படியொரு நம்பிக்கை நாயகியைப் பற்றிக் காண்போம்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஒரு சின்னஞ்சிறிய கிராமத்தைச் சேர்ந்த, 31 வயதான கற்பகவள்ளி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) 15 வருடங்களாக கிளக்கோமா எனும் கண்நீர் அழுத்த நோயிற்காக சிகிச்சை எடுத்து வருகிறார். கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வையை இழந்த இவர், நோய் முற்றிய நிலையில்தான் சிகிச்சைக்கு வந்துள்ளார். இவருக்கு தற்போது வலது கண் அகற்றப்பட்டு செயற்கைக்கண் பொருத்தப்பட்டுள்ளது. இடது கண்ணில் கை அசைவு தெரியும் அளவிற்கு மட்டுமே பார்வை உள்ளது. இவர் தனது தாய் மற்றும் இரண்டு மூத்த சகோதரிகளுடன் வசித்து வருகிறார். பார்வை பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இவர் சில வருடங்களுக்கு முன் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதியபோது இரண்டு தேர்வுகளில் மட்டும் தேர்ச்சி அடைந்திருந்தார். மூன்று பாடங்களில் தோல்வியுற்று இருந்தார். இவர் பத்தாம் வகுப்பு படிக்கும் காலத்திலேயே பெருமளவில் பார்வைத் திறனை இழந்திருந்தாலும் Scribe எனப்படும் துணைத் தேர்வாளர்கள் உதவியுடன் பார்வையற்ற மாணவ, மாணவிகள் தேர்வு எழுதலாம் என்ற விழிப்புணர்வு கற்பகவள்ளிக்கு அப்போது இல்லை.


மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு வருடத்திற்கு ஒருமுறை சிகிச்சை எடுத்துக் கொள்வதற்காக வருகிறார். கடந்த முறை பரிசோதனைக்காக வந்திருந்தபோது தனக்கு படிப்பில் ஆர்வம் இருப்பதாகவும் தொடர்ந்து படிக்க முடியவில்லை என்றும் மிகச் சாதாரணமான வாழ்வை தான் வாழ விரும்பவில்லை என்று மருத்துவரிடம் கூறினார். அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்ட மருத்துவர், மருத்துவமனையிலேயே இயங்கும் குறைபார்வை ஆலோசனை மையத்திற்கு சென்று வாய்ப்புகள் பற்றி தெரிந்துகொள்ளுமாறு அனுப்பிவைத்தார்.

அதன்படி கலந்தாலோசனையில் (counselling) கலந்துகொண்ட கற்பகவள்ளி, கணினி உதவியுடன் தன்னால் படிக்க முடியும் என்று உணர்ந்தார். அதற்கு ஐந்து நாள் பயிற்சி எடுக்க வேண்டும் என்பதையும் மதுரையிலேயே தங்கி ஐந்து நாள் பயிற்சி எடுக்க வேண்டும் என்றும் கேட்டு அறிந்த கற்பகவள்ளி, தனது அக்காவுடன் மீண்டும் கண்நீர் அழுத்த நோய் மருத்துவரைச் சந்தித்தார். விடுதியில் பெண்கள் தங்குவதில் உள்ள பாதுகாப்பின்மையை எடுத்துரைத்தார். உள் நோயாளிகள் பிரிவில் தங்கி, பயிற்சியில் கலந்துகொள்ளும்படி சிறப்பு அனுமதி பெற்றுத் தந்தார் மருத்துவர். மருத்துவருக்கும் அரவிந்த் மருத்துவமனைக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட கற்பகவள்ளியும் அவரது அக்காவும் ஐந்து நாட்கள் தங்கி இருந்து கணினிப் பயிற்சியை மேற்கொண்டனர்.

மேலும் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்த பத்தாம் வகுப்பு பாட நூல்களைக் குறைபார்வை ஆலோசனை மைய பயிற்றுநர் மூலம் பெற்றுக் கொண்டார். கணினியின் உதவி மூலம் பாட நூல்களைப் படிக்க வேண்டும் என்று உறுதி கொண்டார். விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் கல்வி தொடர்பான துறைக்குச் சென்று தான் தோல்வியடைந்த மூன்று பாடங்களையும் மீண்டும் Scribe உதவி மூலம் எழுதுவதற்கு அனுமதி பெற்றார். பிறகு பாட நூல்களைக் கணினி மூலம் ஆடியோ பதிவுகளாகக் கேட்டுக் கேட்டு நினைவில் வைத்துக் கொண்டார். தேர்வின்போது கற்பகவள்ளி சொல்லச் சொல்ல, Scribe ஆக வந்திருந்தவர் கற்பகவள்ளி சொல்வதை எழுதினார். சில வருடங்களுக்கு முன் தான் தோல்வியுற்ற மூன்று பாடங்களிலும் தேர்ச்சி அடைந்து தன் கனவை மெய்ப்பித்தார். தற்போது வணிகவியல் துறையில் பதினோராம் வகுப்பு சேர உள்ளதாகத் தெரிவித்தார். கண்டிப்பாகப் பட்ட படிப்பை முடித்து, நல்ல வேலைக்கு தான் செல்வேன் என்று மிகவும் நம்பிக்கையாகக் கூறியுள்ளார்.

*- வெங்கடேஷ், பயிற்சியாளர்,*
*குறைபார்வை ஆலோசனை மையம், அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை.*




**தரமான கண் கண்ணாடிகள் வாங்க எங்களை அணுகுங்கள்**

**ARAVIND OPTICALS**

**அரவிந்த் ஆப்டிகல்ஸ்**

அரவிந்த் கண்மருத்துவமனை


1, அண்ணாநகர், மதுரை - 625 020

தொலைபேசி - 0452-4356164

- புரொக்ரஸிவ் லென்ஸ்கள்
- பிளாஸ்டிக் லென்ஸ்கள்– லேசான, உடையாத லென்ஸ்கள்
- பிரதிபலிப்பு இல்லாத கண்ணாடிகள்
- கீறல் விழாத கண்ணாடிகள் மற்றும் ஏராளமான அழகிய பிரேம்கள்

# கருவிழிப் புண்

## கண்களை அறிவோம்



நோய்த்தொற்று காரணமாகக் கருவிழியில் புண் உண்டாகும். கண்ணில் தூசி விழுதல், குச்சி, புல், முள், ஆணி போன்றவற்றாலும் கண்ணீர் குறைபாடு, வைட்டமின் ஏ சத்து குறைபாடு, கான்டாக்ட் லென்ஸ் அணிதல் போன்றவற்றாலும் கருவிழிப் புண் ஏற்படும். இந்தப் புண்ணை கவனிக்காமல் தவிர்த்தால் கண்களில் சீழ் உண்டாகும்.

கண் சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கூச்சம், பார்வைக் குறைபாடு, கண்வலி, உறுத்தல், மங்கலான பார்வை போன்றவை இதன் அறிகுறிகள் ஆகும். கருவிழிப் புண் ஏற்பட்டவர்களுக்கு சரியான பரிசோதனை செய்து அதற்கான சொட்டு மருந்தைப் பயன்படுத்தினால் சரி செய்து விடலாம். புண் அதிகமாகி, பின்னர் சரியாகும்போது அந்த இடத்தில் தழும்பு ஏற்படும். தழும்பைச் சரிசெய்ய முடியாது. இந்தத் தழும்பானது கருவிழியின் நடுவில் இருந்தால் நிரந்தரப் பார்வைக் குறைபாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

கண்ணில் தூசிபட்டால் உடனே கண்ணைத் தண்ணீர் விட்டு நன்றாகக் கழுவ வேண்டும். கண்ணில் விழுந்த தூசியை குச்சி போன்றவற்றால் எடுக்கக்கூடாது. குறிப்பட்ட நேரளவை விட அதிக நேரத்திற்கு கான்டாக்ட் லென்ஸை அணியக்கூடாது. நீச்சலின்போதும் கான்டாக்ட் லென்ஸை அணியக்கூடாது. ஆறுகளிலும் அழுக்கான நீரிலும் அடிக்கடி குளிப்பதைத் தவிர்க்கவும்.

மருத்துவரின் பரிந்துரை இன்றி மருந்துக் கடைகளிலிருந்து மருந்துகளையோ சொட்டுமருந்துகளையோ நீங்களாக வாங்கி கண்டிப்பாகப் பயன்படுத்தக்கூடாது. ஆபத்தான பக்க விளைவுகள் ஏற்படும் அபாயம் உள்ளதால் இவற்றைத் தவிர்க்கவும்.

*– பிரதீபா, அரவிந்த் கண் மருத்துவமனை, கோயம்புத்தூர்*

## சந்தா செலுத்த...

2 வருடச் சந்தா: ரூ.50/–

4 வருடச் சந்தா: ரூ.100/–

கண் ஒளி இதழுக்கு சந்தா செலுத்த விரும்புபவர்கள், சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பி வைக்கவும். உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் இலக்க எண்ணையும் குறிப்பிட்டு, 'கண் ஒளி சந்தாவுக்கு' என எழுதவும்.

**முகவரி:**

காசாளர், கண் ஒளி,
அரவிந்த் கண் மருத்துவமனை,
1, அண்ணா நகர், மதுரை – 625020.

இதழின் மேலே இடம்பெற்றுள்ள உங்கள் முகவரி உள்ள ஸ்டிக்கரை பார்த்து உங்கள் சந்தா முடிவடையும் மாதத்தைத் தெரிந்து கொள்ளலாம். இந்த மாதத்துடன் சந்தா முடிவடையும் நிலையில் உள்ளவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி வைக்கவும்.

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பிறந்தநாள், திருமணநாள் பரிசாக 'கண் ஒளி' இதழை அளிக்கவும். இதழுக்கான சந்தாவை எங்களிடம் செலுத்தவும். உங்கள் சார்பாக ஒவ்வொரு மாதமும் கண் ஒளி இதழை உங்கள் அன்புக்குரியவர்களுக்கு நாங்கள் அனுப்பி வைக்கிறோம்.

**தொடர்புக்கு:**

தொலைபேசி: 0452–4356500 Extn.: 516, 530
kannoli@aravind.org

கண்ஒளி பற்றிய உங்கள் கருத்துகளை தபால் மூலமாகவும் தெரிவிக்கலாம்.
ஆன்லைனிலும் தெரிவிக்கலாம்.
https://goo.gl/gDMsmn
இந்த QR code ஐ உங்கள் ஸ்மார்ட் ஃ போனில் ஸ்கேன் செய்தும் அனுப்பலாம்

# காப்பீடு

பொது மருத்துவம்




வெகு சிலருக்கு ஏற்படும் சிறுநீரக பாதிப்பு, இதயநோய் போன்ற நோய்கள் தற்போது பெரும்பான்மையினருக்கு ஏன், இளம் வயதிலேயே ஏற்படுகின்றன? தகுந்த, விரிவான சிகிச்சையை அனைத்து தரப்பினரும் பெறுகிறார்களா என்பது நம் சமூகத்தின் முன் நிற்கும் முக்கியக் கேள்வி. திடீரென உடல்நலப் பாதிப்பு ஏற்பட்டுவிட்டால் அதைச் சமாளிக்கும் அளவிற்கு கையில் எப்போதும் பணம் வைத்திருக்கும் வாய்ப்பும் நடுத்தரக் குடும்பத்தினருக்குப் பெரும்பாலும் இருப்பதில்லை. இந்த இரு நிலைகளிலும் மக்களுக்கு உதவவே மருத்துவக் காப்பீடு உதவுகிறது.

### அரசு மருத்துவக் காப்பீடுகள்:

அரசுப் பணியாளர்களுக்கு மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கான காப்பீட்டு திட்டம், அனைவருக்கும் முதலமைச்சர் காப்பீட்டு திட்டம் போன்ற அரசின் காப்பீட்டு நிறுவனங்களும் பல தனியார் காப்பீட்டு நிறுவனங்களும் இந்தச் சேவையை வழங்குகின்றன.

மாநில அரசுகளின் காப்பீடு திட்டத்தில் பணமற்ற சிகிச்சை முறை மட்டுமே சாத்தியம். மாநில அரசு வழங்கும் காப்பீட்டு அடையாள அட்டை இருந்தால் அதை வைத்து சிகிச்சைக்கு விண்ணப்பிக்கலாம். அடையாள அட்டை இல்லாதவர்கள்/அடையாள அட்டையில் சரியான விவரங்கள் குறிப்பிடப்படாதவர்கள் பின் இணைப்புப் படிவத்தை (Annexure) நிரப்பி அதில் துறைத் தலைவர் அல்லது கருவூல அதிகாரியிடம் (Treasury Officer) கையொப்பம் பெற்று, வருமானச் சான்றிதழுடன் காப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வேண்டும். அதன் பின் சில குறிப்பட்ட நாட்களை அரசாங்கம் ஒதுக்கித் தரும். அந்த தேதிக்குள் நோயாளி அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். அரசு குறிப்பிடும் தேதிக்குள் அறுவை சிகிச்சை செய்துகொள்ள முடியாதவர்கள் மீண்டும் காப்பீடு பெற விண்ணப்பித்த பின்னரே சிகிச்சை பெற முடியும்.

மருத்துவக் காப்பீட்டைப் பொறுத்தவரை மருத்துவமனைக் கட்டணங்கள் செலுத்தாமல் காப்பீட்டுப் பணத்தின் மூலம் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது, மருத்துவக் கட்டணங்களைச் செலுத்தி விட்டு, காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பிறகு பணத்தைத் திரும்பப் பெறுவது என இரு வழிமுறைகள் உள்ளன. இந்த இரண்டு வழிமுறைகளுமே பெரும்பாலான மருத்துவமனைகளில் உள்ளன.

### தனியார் மருத்துவக் காப்பீடுகள்:

தனியார் நிறுவனங்கள் மற்றும் கார்பரேட் நிறுவங்களின் காப்பீட்டு திட்டத்தில், அந்நிறுவனங்களின் அனுமதி கிடைத்தால் மட்டுமே நோயாளிகள் காப்பீட்டின் மூலமாக சிகிச்சைப் பெறமுடியும். தனியார் நிறுவங்களுடன் மருத்துவமனைகள் ஒப்பந்தம் செய்துகொள்ளும் போதே ஒவ்வொரு சிகிச்சைக்குமான விலைப்பட்டியல் காப்பீட்டு நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும். அதனடிப்படையில், எந்தெந்த சிகிச்சைகளுக்கு எவ்வளவு பணம் பெறமுடியும் என்பதைக் குறிப்பிட்ட காப்பீட்டு நிறுவனங்களே முடிவு செய்யும்.

தனியார் பாலிசிகளைப் பொறுத்தவரை ஏற்கனவே உள்ள நோய்களுக்கு பாலிசி எடுத்த இரண்டு வருடங்கள் கழித்தே அவர்கள் பெறும் சிகிச்சைக்கான காப்பீட்டைப் பெறமுடியும் என்பதை நோயாளிகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நோயாளிகளுக்கு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களில் உடனடியாக சிகிச்சைக்கு அனுமதி கிடைக்காதபோது, இவர்கள் முதலில் பணம் செலுத்தி

சிகிச்சை பெற்றுவிட்டு, அந்த ஆவணங்களை வைத்து அந்தந்த காப்பீட்டு நிறுவனத்தில் விண்ணப்பித்து, மீண்டும் பணத்தைப் பெற்றுக்கொள்ள இயலும்.

### கண் மருத்துவமும் காப்பீடும்:

மாநில அரசுகளின் காப்பீட்டைப் பொறுத்தவரை கண்புரை அறுவை சிகிச்சைக்கு 15,000 மட்டுமே பெறமுடியும். அதற்கு மேல் ஆகும் செலவுகளை நோயாளிகளே பார்த்துக்கொள்ள வேண்டும். லேசிக் போன்ற அழகுக்கான அறுவை சிகிச்சைகள் மட்டும் எந்த காப்பீட்டுத் திட்டத்திலும் சேராது. முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தில் 13 வயதிற்கு மேற்பட்டோர் கண்புரை அறுவை சிகிச்சை செய்துகொள்ள இயலாது. ஆனால் மற்ற அனைத்து விழித்திரை அறுவை சிகிச்சைகளையும், கருவிழி மாற்று அறுவை சிகிச்சையையும் செய்துகொள்ள முடியும்.

### மருத்துவக் காப்பீடு அனைவருக்குமானது:

மருத்துவக் காப்பீட்டு திட்டமானது நடைமுறைக்கு வந்தபோது, போதிய விழிப்புணர்வு மக்களிடம் இல்லை. ஆனால், தற்போது மக்களிடையே காப்பீடு குறித்த விழிப்புணர்வு அதிகம் உள்ளதாகவும் நோயாளிகள் தாமாகவே முன்வந்து காப்பீடு குறித்த விவரங்களை தற்போது கேட்பதாகவும் இத்துறைப் பணியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆயுள் காப்பீடுகளைப் போல மருத்துவக் காப்பீட்டில் செலுத்திய பணத்தைத் திரும்பப் பெற இயலாது என்ற காரணத்திற்காக பலர் இதனை விரும்புவதில்லை. ஆனால், ஏதேனும் உடல்நல பாதிப்புகள் ஏற்படும்போது பணத்தைக் குறித்துக் கவலைகொள்ளாமல் இருப்பதற்கு மருத்துவக் காப்பீடுகள் பெரிதும் உதவும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ***தொகுப்பு: திவ்யா ரமேஷ்***

## எய்ட்ஸ் நோயும் கண் பாதிப்பும்

எய்ட்ஸ் நோயைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. இது ஒரு உயிர்க்கொல்லி நோய் ஆகும். எய்ட்ஸ் நோய் (HIV - Human Immunodeficiency Virus) என்ற வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது. இந்தக் கிருமி உடலிலுள்ள எதிர்ப்பு சக்தியைக் குறைக்கிறது. அதனால் மற்ற கிருமிகள் எளிதாக உடலைத் தாக்குவதால் நோய் ஏற்படுகிறது. முறையற்ற வாழ்வே இந்த நோய்க்கு முக்கிய காரணம்.

கண்வலி, கண்களில் சிவப்பு, கண்களில் உறுத்தல், பார்வை மங்குதல் போன்ற அறிகுறிகள் தோன்றும். ஹெர்பிஸ் எனப்படும் வைரஸ் தாக்கி, கண் இமை மற்றும் முகத்தில் பரு, தீராத வலி, தழும்பு போன்றவை ஏற்படலாம். அதேபோல் பாக்ஸ் (POX) வைரஸும் எளிதில் தாக்கும்.

கருவிழியை பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமிகள் எளிதில் தாக்கி, கருவிழிப் புண் மற்றும் கண் பார்வைக் கோளாறு ஏற்படும். ஹெர்பஸ் வைரஸ் கிருமிகள் கண்ணின் விழித்திரையும் பாதிக்கிறது. இது ரெட்டினல் நெக்ரோசிஸ் என்று கூறப்படுகிறது. இதில் விழித்திரை பாதிக்கப்பட்டு நிரந்தரப் பார்வை கோளாறு ஏற்படுகிறது.

சைட்டோ மெகுலோ வைரஸ் ரெட்டினைடிஸ் (CMV Retinitis) என்ற விழித்திரை நோய் மிகவும் அதிக அளவில் காணப்படுகிறது. இந்த நோயால் விழித்திரையில் இரத்தக்கசிவு ஏற்பட்டுக் கண்பார்வை பாதிப்பு ஏற்படும். இந்தக் கிருமி, பார்வை நரம்பையும் பாதித்து அதில் வீக்கம் ஏற்படுத்தி பார்வை நரம்புகள் அழியவும் வாய்ப்பை உருவாக்குகிறது.

டாக்ஸோ பிளாஸ்மா (Toxoplasma) என்ற கிருமியும் விழித்திரையை எளிதில் பாதித்து, கண்பார்வையைப் பறிக்கிறது. இதுமட்டுமல்லாமல் கண்ணைச் சுற்றியுள்ள தசைகள், கொழுப்புச் சத்து போன்றவைகளும் எளிதில் கிருமிகளினால் தாக்கப்பட்டு கண் சிகப்பு, கண்ணில் வலி, இரட்டைப் பார்வை, வீக்கம், கண் அசைவுகளில் குறைபாடு போன்றவை ஏற்படுகிறது. இது ஆர்பிடல் செல்லுலைடிஸ் (Orbital cellulitis) என்று அழைக்கப்படுகிறது. இப்பொழுது எய்ட்ஸ் நோய்க்கான சிகிச்சை அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாகக் கிடைக்கிறது. ***– ஆ.வள்ளி. DOT விழிஒளி ஆய்வாளர், அரவிந்த் கண் மருத்துவமனை, சேலம்.***

# யூவியா

## கண்களை அறிவோம்

நமது விழியானது மூன்று அடுக்குகளைக் கொண்டது. விழியின் வெளிப்புறத்தில் ஸ்கிளீரா (Sclera) எனும் அடுக்கு உள்ளது. உட்புறத்தில் ரெட்டினா எனும் அடுக்கு உள்ளது. இந்த இரண்டு அடுக்குகளுக்கு இடையே யூவியா எனும் அடுக்கு உள்ளது. இப்பகுதி வீக்கமடைவதால் ஏற்படும் நோயே யூவியைட்டீஸ் எனப்படுகிறது. யூவியா வீக்கமடைவதால் கண்களில் வலி, கண்சிவப்பு அல்லது மங்கலான பார்வை ஆகியவை உண்டாகக்கூடும். சரியான நேரத்தில் சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிட்டால் நிரந்தர பார்வையிழப்பு ஏற்படும் அபாயமும் உள்ளது.

### காரணங்கள்:

யூவியைட்டீஸ் ஏற்பட பல காரணங்கள் உள்ளன.

– M.Tuberculosis, M.Leprae அல்லது syphilis போன்ற பாக்டீரியாக்களால் ஏற்படும்.
– வைரஸினால் ஏற்படும் தொற்றுகளால் உண்டாகும்.
– ஒட்டுண்ணியால் ஏற்படும் தொற்றுகளால் ஏற்படும்.
– கண்ணில் அடிபடுவதால் ஏற்படுகிறது.

யூவியைட்டீஸ் தோன்றுவதற்கான காரணங்கள், சில வேளைகளில் கண்டறிய முடியாதபடி உள்ளன.

### அறிகுறிகள்:

வெளிச்சத்தைப் பார்க்கும்போது கண்ணில் அதிக கூச்சம் ஏற்படுதல்

– மங்கலான பார்வை
– கண் வலி
– கண்சிவப்பு
– கண்ணில் பூச்சி பறப்பது போல் உணர்தல்

### சிகிச்சை

நோய்த் தொற்றுகளால்தான் யூவியைட்டீஸ் பெரும்பாலும் ஏற்படுகிறது. இந்தத் தொற்றுகள், உங்கள் ஒட்டுமொத்த உடலையும் பாதிக்கலாம். கண் மருத்துவரால் உங்களது கண்களை மட்டுமே குணப்படுத்த முடியும். உடலின் மற்ற பகுதிகளில் நோயைக் கட்டுப்படுத்த பிற சிகிச்சை முறைகள் அவசியமாகிறது. சிகிச்சையின் முக்கிய நோக்கம்:

– வலியை குணப்படுத்துதல்
– பார்வையிழப்பைத் தடுத்தல்
– யூவியைட்டீஸை உண்டாக்கும் நோய்த்தொற்று அல்லது நோயைக் குணப்படுத்துதல்

நோயின் தீவிரத்தன்மையைப் பொறுத்தே முன்னேற்றமானது அமையும். யூவியைட்டீஸ் நோயை முற்றிலும் குணப்படுத்த முடியாதெனினும் நிச்சயம் கட்டுப்படுத்த முடியும். யூவியைட்டீஸ் நோய்க்கான சிகிச்சை முறைகளில் மருத்துவ ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் உள்ளன. தற்போதைய சிகிச்சை முறைகளின் மூலம் உங்கள் பார்வைத் திறனைப் பாதுகாக்க முடியும். சிகிச்சையை விரைவாகத் தொடங்குவதன் மூலம் பார்வைத் திறனைப் பாதுகாக்க முடியும்.

### அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

#### எனது கண்ணில் ஒவ்வாமை அல்லது நோய்த் தொற்று ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?

இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் சில காரணங்களைக் கூற முடியும். உங்கள் கண்ணில் பலத்த அடிபட்டிருக்கக்கூடும். உங்கள் உடலில் பாக்டீரியாவால் தொற்று ஏற்பட்டிருக்கக்கூடும். சிலருக்கு எந்தவொரு தெளிவான காரணமும் இன்றி ஒவ்வாமை ஏற்படக்கூடும்.



**எனக்கு காசநோய் (TB) இருந்தால், எனது கண்களும் பாதிக்கப்படுமா?**

உங்களுக்கு காசநோய் இருந்தால், உங்கள் கண்களும் பாதிக்கப்படக்கூடும். உங்களுக்கு காசநோய் உள்ளதா என்பதைக் கண்டறிய, மருத்துவரின் பரிந்துரையின்பேரில் இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே அல்லது CT ஸ்கேன் போன்ற சில பரிசோதனைகளை மேற்கொள்ளவும்.

**காசநோய்க்கான (TB) மருந்துகளை நான் எடுத்துக்கொண்டாலும் எனக்கு மீண்டும் TB நோய்த்தொற்று ஏற்படுமா?**

காசநோய்க்கான சிகிச்சையை நீங்கள் ஆறு முதல் ஒன்பது மாதங்கள் வரை தொடர்ந்து எடுக்க வேண்டும். தொடர்ந்து மாத்திரைகளை உட்கொண்டால் உங்களுக்கு மீண்டும் நோய்த்தொற்று ஏற்படாது.


**நான் கர்ப்பமாக இருக்கும்போதோ குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும்போதோ காசநோய்க்கான மாத்திரைகளையோ Immunosuppressive எனும் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைக்கும் மாத்திரைகளையோ எடுத்துக் கொள்ளலாமா?**

அவற்றை நீங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது

**யூவியைட்டீஸ் நோயிலிருந்து விடுபட அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டுமா?**

பொதுவாக, யூவியைட்டீஸ் நோயானது கண் சொட்டு மருந்துகள் மற்றும் மாத்திரைகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டாலே போதும். எனினும் வெகு சில வேளைகளில் மட்டும் அறுவை சிகிச்சை செய்யப்படுகின்றன.

**சொட்டு மருந்துகளை நான் பயன்படுத்தினால், எனது கண்கள் குணமடையுமா? தொடர்ந்து சொட்டு மருந்துகளைப் போட்டுக் கொள்ள வேண்டுமா?**



சில நோயாளிகளுக்கு சொட்டு மருந்துகளை மட்டும் எடுத்துக்கொண்டால் போதுமானது. மற்றவர்கள், சொட்டு மருந்துடன் மாத்திரைகளையும் எடுத்துக்கொண்டால் நோயைக் கட்டுப்படுத்த முடியும். முறையான சிகிச்சை எடுத்துக்கொண்டால் நோய்த்தொற்றைத் தடுக்கலாம். மருத்துவரின் ஆலோசனையையும் அறிவுரையையும் எப்போதும் பின்பற்றவும்.

**ஸ்டீராய்டு மாத்திரைகளை எடுத்துகொள்ளும்போது தனிப்பட்ட உணவுமுறையைப் (Diet) பின்பற்ற வேண்டுமா?**

மாத்திரைகளை எடுத்துக்கொள்ளும்போது எந்தத் தனிப்பட்ட உணவுமுறையையும் பின்பற்றத் தேவையில்லை. எனினும் ஸ்டீராய்டு மருந்துகளை உட்கொள்ளத் தொடங்கிய நாளிலிருந்து உங்கள் உணவில் சர்க்கரை மற்றும் உப்பின் அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

**பிற நோய்களுக்கு இதுவரை நான் எடுத்துவரும் மருந்துகளை யூவியைட்டீஸ் நோய்க்கான சிகிச்சையைத் தொடங்கிய பின்னரும் தொடரலாமா?**

கண் மருத்துவரிடம் நீங்கள் எடுத்துகொள்ளும் மருந்துகளின் விவரத்தைத் தெரிவிக்கவும். கண் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் உங்கள் மருந்துகளைத் தொடரலாம்.

**– S.K.ராஜேஸ்வரி,**

***விழி ஒளி ஆய்வாளர், அரவிந்த் கண் மருத்துவமனை, கோயம்புத்தூர்***

# ஆலோசனைப் பகுதி



**வணக்கம், எனக்கு கணினியில் பணிபுரியும்போது தொடர்ந்து தலைவலி வந்து கொண்டிருக்கிறது. கடந்த சில வாரங்களாக இந்த வலியானது கழுத்து பின்புறத்தில் தொடங்கி பின்பு தலைவலி வருகிறது. கண்களிலும் வலி இருக்கிறது. நான் கண்ணாடி கடையில் கண் பரிசோதனை செய்து பார்த்தபோது 0.25 என்ற ''பவர்'' இருந்தது. நான் கண்ணாடி அணிந்து கொள்ளலாமா அல்லது கண் மருத்துவர் ஆலோசனையைப் பெற வேண்டுமா அல்லது உணவு முறையை மேம்படுத்த வேண்டுமா?**

நீங்கள் தொடர்ந்து கணினியில் பணிபுரிபவராக இருந்தால், இது கணினிப் பார்வை சின்ட்ரோம் ஆக இருக்க அதிக வாய்ப்புள்ளது. எனவே நீங்கள் கண்களை ஈரப்பதத்துடன் வைத்துக் கொள்ள செயற்கைக் கண்ணீரை வரவழைக்கும் கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்தலாம். Ocupol என்ற கண் களிம்பினை ஒரு நாளைக்கு இருமுறை கண்பட்டையில் தடவலாம். பிரகாசமான ஒளியைப் பார்ப்பதைத் தவிர்க்கவும். கண்களை அடிக்கடி சுத்தமான நீரைக் கொண்டு கழுவுங்கள். உங்கள் அலுவலக அறையில் ஏசி இருந்தால் அதற்கு நேராக அமர்வதைத் தவிர்த்து விடுங்கள். கழுத்து வழியைத் தவிர்க்க சில எளிய பயிற்சிகளை மேற்கொள்ளலாம். கணினியில் பணிபுரியும்போது எப்படி அமர வேண்டும் என்ற விதிகளைப் பின்பற்றுங்கள். உங்களுக்கு கண்களில் இருப்பது சிறிய ''பவர்'' என்பதால் கண்ணாடி அணிய வேண்டிய அவசியமில்லை. சில சமயங்களில் இது மைக்ரேன் என்ற ஒற்றைத் தலைவலியாக இருக்கும் வாய்ப்புள்ளது. எனவே உங்களது குடும்ப மருத்துவரிடம் ஒருமுறை பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

---

**எனது மூன்றரை வயது மகன் கடந்த ஒரு வாரமாக, வழக்கத்திற்கு மாறாக, இடது கண்ணை அடிக்கடி சிமிட்டிக் கொண்டே இருக்கிறான். ஆரம்பத்தில் இரண்டு, மூன்று நாட்களில் இது தானாக சரியாகி விடும் என்றே கருதினேன். ஆனால் இடது கண்ணின் துடிப்பு அதிகமாகிக் கொண்டேதான் செல்கிறது. கண் மருத்துவரை அணுக வேண்டுமா ? நரம்பியல் மருத்துவரை அணுக வேண்டுமா?**

உங்கள் குழந்தைக்கு மையோக்கியா (Myokymia) என்ற பாதிப்பு ஏற்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. மையோக்கியா என்பது நமது கண் இமைப் பட்டைகளில் இருக்கும் தசைகள் அயர்ச்சியின் காரணமாக அடிக்கடி உள்ளிருந்து வெளியாகவோ அல்லது வெளியிலிருந்து உள்ளாகவோ இழுத்துக் கொள்ளும். இதற்கு மனஅழுத்தம், சோர்வு, தூக்கமின்மை, உலர் கண் மற்றும் நாம் உட்கொள்ளும் சில மருந்துகளின் பக்க விளைவுகள் காரணமாக இருக்கலாம். ஆனால் குழந்தைகளுக்கு இப்பாதிப்பு ஏற்படுவதற்கு, அவர்கள் அலைபேசி, கணினி போன்றவற்றை அடிக்கடி பார்த்துக்கொண்டே இருப்பது முக்கியக் காரணமாக இருக்கலாம். வீட்டிலேயே வைத்துச் செய்யக்கூடிய சில கணினிப் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள் அல்லது அருகில் இருக்கும் குழந்தைகள் நல கண் மருத்துவரை அணுகுங்கள். ஒரு வாரத்திற்கு இந்த பாதிப்பு இருப்பது சாதாரணமான ஒன்றுதான். ஆனால் இது தொடர்ந்து கொண்டே இருந்தால் கண் மருத்துவரின் ஆலோசனை கட்டாயம் தேவை.


கண் நோய்கள், சிகிச்சை முறைகள் பற்றிய உங்கள் சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்பவும். உங்களது கேள்விகளுக்கு அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவர்கள் பதிலளிப்பார்கள்.

**ஆலோசனைப் பகுதி, கண் ஒளி,**

**அரவிந்த் கண் மருத்துவமனை, 1, அண்ணாநகர், மதுரை – 625020**

**மின்னஞ்சல் மூலமாக உங்கள் கேள்விகளை அனுப்ப:** kannoli@aravind.org

# கண் பரிசோதனை மையம் – தூத்துக்குடி மாவட்டம்



தமிழகத்தின் கடற்கரையோர மாவட்டங்களில் முக்கியமான மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம். முத்துநகரம் எனப் பெயர் பெறும் அளவிற்கு கடலிலிருந்து எடுக்கப்படும் முத்து ஏற்றுமதிக்கு புகழ்பெற்ற நகரம், தூத்துக்குடி. மகாகவி பாரதியார், உமறு புலவர், கட்டபொம்மன் போன்ற மாபெரும் ஆளுமைகள் பிறந்த மாவட்டம், கடற்கரையில் அமைந்துள்ளதால் போர்ச்சுகீசியர், டச்சு மற்றும் இங்கிலாந்து நாட்டினர் வர்த்தக நோக்கங்களுக்காக வந்துள்ளனர். ரோம் நாட்டுடன் தூத்துக்குடி நகரத்தினர் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதாக நம் இலக்கியங்களும் தொல்லியல் ஆய்வுகளும் கூறுகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு சிறப்பான கண் சிகிச்சையை அளிக்கும் நோக்கோடு தூத்துக்குடி நகரில் அரவிந்த் மருத்துவமனையானது 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கும் அரவிந்தின் தேவை இருப்பதால் கண் பரிசோதனை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கண்புரை மற்றும் ஒவ்வாமையால் ஏற்படும் கண்வலியால் பாதிக்கப்படும் மக்கள் இந்தக் கண் பரிசோதனை மையங்களுக்கு ஆலோசனைகளுக்காகவும் சிகிச்சைகளுக்காகவும் வருவதாக அங்கு பணிபுரியும் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இம்மாவட்டத்தில் வசிக்கும் மக்களில் பலர் உப்பளங்களில் வேலை செய்கின்றனர். பிரகாசமான ஒளியைப் பார்க்க வேண்டியுள்ளதால் ரிஃப்ராக்டிவ் எரர் (Refractive Error) எனும் பார்வைக் குறைபாட்டிற்கும் உள்ளாகின்றனர்.

| 2017 டிசம்பர் மாதம் வரை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரவிந்த் கண் பரிசோதனை மையங்களில் சிகிச்சை எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| மொத்த வெளிநோயாளிகள் | 1,56,489 |
| கண்ணாடி வாங்கியவர்கள் | 21,354 |
| கண்புரை அறுவை சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 4,716 |
| சிறப்பு பிரிவுகளில் சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 8,921 |

**ஸ்ரீவைகுண்டம்**
62, மேற்கு சன்னிதி தெரு,
(பெருமாள் கோவில் அருகில்)
ஸ்ரீவைகுண்டம் – 628601
தொலைபேசி: 04630–320999

**கழுகுமலை**
66/103, தெற்கு ரதவீதி,
போலீஸ் ஸ்டேஷன் ரோடு,
கழுகுமலை – 628552
தொலைபேசி: 04632–251010

**விளாத்திக்குளம்**
48/66–A, M.P. பவனம்,
மீனாட்சி அம்மன் கோவில் தெரு,
விளாத்திக்குளம் – 628907
தொலைபேசி: 04638–233320

**புதியம்புத்தூர்**
12/8G, தட்டபாறை மெயின் ரோடு,
தர்மராஜ் காம்ப்ளெக்ஸ்,
புதியம்புத்தூர்–628402
தொலைபேசி: 04612–261330

2018 – ஜூலை 27 அன்று "வாடிப்பட்டி"யில் அரவிந்த் கண் பரிசோதனை மையம் தொடங்கப்பட்டுள்ளது

**வாடிப்பட்டி**
17–1–492, மதுரை–திண்டுக்கல் மெயின் ரோடு,
ராமநாயக்கன்பட்டி, UCO வங்கி அருகில்,
வாடிப்பட்டி–625218.
போன்: 9498840013

# அரவிந்த் கண் மருத்துவமனை நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம்கள் பற்றிய விவரங்கள்

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 15.8.18 | திருப்பாறைதுறை | இராமகிருஷ்ணா தபோவனம் | திருச்சி | இராமகிருஷ்ணா தபோவனம் | 9486705755 |
| 15.8.18 | விருதுநகர் | ஆரிய வைசிய திருமண மண்டபம் | விருதுநகர் | லெட்சுமண ஆசாரி ஜூவல்லரி | 9965545555 |
| 16.8.18 | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 16.8.18 | ஜெயமங்கலம் | திருமண மண்டபம் | தேனி | தேனி வைகை அரிமா சங்கம் | |
| 17.8.18 | பொள்ளாச்சி | லயன்ஸ் ஹால் | கோயமுத்தூர் | லயன்ஸ் சங்கம் | 9994611911 |
| 17.8.18 | சிதம்பரம் | ஜெயின் பில்டிங் | கடலூர் | மஹாவீர் ஜெயின் அசோசிசன் | |
| 18.8.18 | கடவூர் | இன்பசேவா சங்கம் | கரூர் | இன்பசேவா சங்கம் டிரெயினிங்செல் | 9042261153 |
| 18.8.18 | மீமிசல் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | புதுக்கோட்டை | லயன்ஸ் சங்கம் | 9865458959 |
| 18.8.18 | காரியாபட்டி | அசாபா (Asafa) ஆபிஸ் | விருதுநகர் | அசாபா (Asafa) ஆபிஸ் | 9176996614 |
| 18.8.18 | ஒரத்தநாடு | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | தஞ்சாவூர் | லயன்ஸ் சங்கம் | 9842653344 |
| 18.8.18 | மங்கநல்லூர் | K.S.O.பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் மயிலாடுதுறை | |
| 19.8.18 | கொள்ளேகால் | அரசு தாலூகா தலைமை மருத்துவனை | சாம்ராஜ்நகர் | V&M பவுண்டேஷன் பெங்களூர் | 9343968272 |
| 19.8.18 | திருப்பூர் | லயன்ஸ் ஹால் | திருப்பூர் | லயன்ஸ் சங்கம் | 9442190045 |
| 19.8.18 | தென்காசி | சுப்புராஜ் மஹால் | திருநெல்வேலி | BSSSSO | 9842132442 |
| 19.8.18 | பட்டம்பி | வியாபாரி பவன் டிரஸ்ட் | பாலக்காடு | சேம்பர் ஆப் காமர்ஸ் | 9846781688 |
| 19.8.18 | நல்லம்பள்ளி | விஜய் வித்யாலயா ஆர்ட்ஸ் கல்லூரி | தருமபுரி | விஜய் வித்யாலயா ஆர்ட்ஸ் கல்லூரி | 9865887393 |
| 19.8.18 | மேக்குடி | சீரடி சாய்பாபா கோவில் | திருச்சி | சீரடி சாய் டிரஸ்ட் | 9443979917 |
| 19.8.18 | நாமக்கல் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | நாமக்கல் | லயன்ஸ் சங்கம் | 9443226052 |
| 19.8.18 | அத்திப்பட்டி | Rm.P.S.இராமையா நாடார் மே.நி.பள்ளி | மதுரை | அத்திப்பட்டி நாடார் சங்கம் | 9710307077 |
| 19.8.18 | காரைக்குடி | ஆயிரம் வைசியர் திருமண மண்டபம் | சிவகங்கை | லயன்ஸ் சங்கம் | 9443207554 |
| 19.8.18 | ஆத்திகுளம் | இராமகிருஷ்ணா மடம் | மதுரை | இராமகிருஷ்ணா மடம் | 9487493525 |
| 19.8.18 | ஆயக்காரன்புலம் | இரா.நடேசனார் அரசு மே.நி.பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் | |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 19.8.18 | செய்யார் | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | திருவண்ணாமலை | கௌதம் பைனான்ஸ் | |
| 19.8.18 | கம்பம் புதுப்பட்டி | வீணா வித்யாலயா | தேனி | கம்பம் அரிமா சங்கம் | |
| 19.8.18 | லெட்சுமிபுரம் | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | தேனி | தேனி வைகை அரிமா சங்கம் | |
| 20.8.18 | பரமக்குடி | ஜெயம் திருமண மண்டபம் | இராமநாதபுரம் | அன்பு டிராக்டர்ஸ் | 9443131491 |
| 25.8.18 | ஹன்சூர் | SLV கம்யூனிட்டி ஹால் | மைசூர் | திரு.சின்னசாமி மற்றும் முருகேசன் குடும்பம் | 9448352929 |
| 25.8.18 | T. கல்லுப்பட்டி | அய்யனார் கல்யாண மஹால் | மதுரை | நகர்நல கமிட்டி | 9842175940 |
| 25.8.18 | வளநாடு | இராமரத்தின கல்யாணமஹால் | திருச்சி | Dr.VNL டிரஸ்ட் | 9965560142 |
| 25.8.18 | முள்ளுகுறிச்சி | சாமி மெட்ரிக் மே.நி.பள்ளி | நாமக்கல் | பாவாயி அம்மாள் கல்வி அறக்கட்டளை | 9443517998 |
| 25.8.18 | கொட்டாம்பட்டி | கம்யூனிட்டி ஹால் | மதுரை | வட்டார களஞ்சியம் | 8610107412 |
| 25.8.18 | போளூர் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | திருவண்ணா மலை | லயோலா அகாடமி | |
| 25.8.18 | கணூர் | சர்ச் | கடலூர் | சிஸ்டர் அக்னஸ் | |
| 25.8.18 | பரம்பூர் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | புதுக்கோட்டை | பஞ்சாயத்து மற்றும் உதயம் ஜவுளிக்கடை | 9843020849 |
| 26.8.18 | ஊட்டி | CSI ஹோபார்ட் பள்ளி | நீலகிரி | ரோட்டரி சங்கம் | 9442109100 |
| 26.8.18 | கும்பகோணம் | சரஸ்வதி பாடசாலை | தஞ்சாவூர் | கும்பகோணம் ஹோஸ்ட் | 9443116356 |
| 26.8.18 | பண்ருட்டி | லயன்ஸ் பில்டிங் | கடலூர் | லயன்ஸ் சங்கம் | |
| 26.8.18 | கல்வார்பட்டி | அரசு ந.நி.பள்ளி | திண்டுக்கல் | கௌதம் பைனான்ஸ் | 9842310650 |
| 26.8.18 | நென்மேனி மேட்டுப்பட்டி | லெட்சுமி திருமண மண்டபம் | விருதுநகர் | லெட்சுமி சாரிட்டபிள் டிரஸ்ட் | 9487421826 |
| 26.8.18 | ஆத்தூர் | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | திண்டுக்கல் | அய்யம்பாளையம் டவுன் அரிமா சங்கம் | |
| 26.8.18 | கப்பலூர் | தியாகராஜர் மே.நி.பள்ளி | மதுரை | தியாகராஜர் மில் | 9943065244 |
| 26.8.18 | மங்கள் | அரசு மே.நி.பள்ளி | திருவண்ணாமலை | M.அப்பாய் டிரஸ்ட் | |
| 26.8.18 | பாலகுறிச்சி | அரசு ந.நி.பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் வேளாங்கண்ணி | |
| 26.8.18 | கோம்பை | கன்னிகா பரமேஸ்வரி துவக்கப்பள்ளி | தேனி | போடி அரிமா சங்கம் | |
| 29.8.18 | வெள்ளகோவில் | கணபதி ஆயில் மில் | திருப்பூர் | TRG ஆயில் மில் | |
| 30.8.18 | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 1.9.18 | தருமபுரி | ரோட்டரி ஹால் | தருமபுரி | ரோட்டரி சங்கம் | 9842761659 |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 1.9.18 | சிந்தாமணி | R.C. பிரைமரி பள்ளி | திருநெல்வேலி | ராஜகோபால் நாயக்கர் டிரஸ்ட் | 9865493488 |
| 1.9.18 | செங்கம் | கணேசர் திருமண மண்டபம் | திருவண்ணாமலை | கணேசர் குரூப்ஸ் | |
| 2.9.18 | சாம்ராஜ் நகர் | அரசினர் மருத்துவமனை | சாம்ராஜ் நகர் | DBCS சாம்ராஜ் நகர் | 9945228015 |
| 2.9.18 | வடசேரி | SMRV மே.நி.பள்ளி | கன்னியாகுமரி | BSSSSO | 9578678075 |
| 2.9.18 | கொப்பம் | லயன்ஸ் பள்ளி பாலக்காடு | பாலக்காடு | லயன்ஸ் சங்கம் | 9349458196 |
| 2.9.18 | திருப்பரங்குன்றம் | மாதா அமிர்தானந்தமயி மடம் | மதுரை | மாதா அமிர்தானந்தமயி மடம் | 9443337080 |
| 2.9.18 | மேட்டுப்பாளையம் | ஜெயின் சங்கம் பில்டிங் | கோயமுத்தூர் | ஜெயின் சங்கம் | 9865789137 |
| 2.9.18 | கோபிசெட்டிப் பாளையம் | சின்ன வைரவிழா எலிமெண்டரி பள்ளி | ஈரோடு | லயன்ஸ் சங்கம் | 9791966759 |
| 2.9.18 | திருவண்ணா மலை | கார்மெல் மெ.பள்ளி | திருவண்ணாமலை | சாயர் ஜீவல்லர்ஸ் | |
| 2.9.18 | திருவெரம்பூர் | ஸ்ரீ ஜெய் சாய் கோவில் | திருச்சி | ஸ்ரீ ஜெய் சாய் டிரஸ்ட் | 9865612614 |
| 5.9.18 | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா ஹால் | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா | 9486030438 |
| 8.9.18 | சத்தியமங்கலம் | ரோட்டரி ஹால் | ஈரோடு | ரோட்டரி சங்கம் சத்தி | 9943011211 |
| 8.9.18 | தருமபுரி | சந்திரபாலசுப்பிரமணியம் மெ.பள்ளி | தருமபுரி | ஹேமலதாடிரஸ்ட் | 9942253585 |
| 8.9.18 | நஞ்சன்கூடு | டவுன் டென்னிஸ் கிளப் | மைசூர் | டவுன் டென்னிஸ் கிளப் | 9019126767 |
| 8.9.18 | உடுமலைப்பேட்டை | லயன்ஸ் ஹால் | திருப்பூர் | லயன்ஸ் சங்கம் | 9894623625 |
| 9.9.18 | R.R. நகர் | ஸ்ரீராம் பிரைமரி பள்ளி | விருதுநகர் | ராம்கோ சிமெண்ட் | 9994497864 |
| 9.9.18 | ஈரோடு | செங்குந்தர் ஆண்கள் மே.நி.பள்ளி | ஈரோடு | லயன்ஸ் சங்கம் | 9443405016 |
| 13.9.18 | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 15.9.18 | கடவூர் | இன்பசேவா சங்கம் | கரூர் | இன்பசேவா சங்கம் டிரெயினிங்செல் | 9042261153 |
| 15.9.18 | கண்டவராயன்பட்டி | பனிசாருடையார் பாடசாலை | சிவகங்கை | நியூ S.P.மெடிக்கல்ஸ் | 9944666683 |



*ஒவ்வொரு மாதமும் 10, 11 தேதிகளில் கண் ஒளி இதழ்களை 15000க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களின் முகவரிகளுக்கு முறையாகச் சரிபார்த்த பின்னரே தபாலில் அனுப்பி வைக்கிறோம். இருப்பினும் வெகு சில சந்தாதாரர்கள் தங்களுக்கு 'கண் ஒளி' இதழ்கள் சரிவர கிடைப்பதில்லை என்றும், ஒரு மாதம் வரும் இதழ் மறு மாதம் வருவதில்லை என்றும் புகார் அளிக்கின்றனர். இதழ் கிடைக்கவில்லை எனில் உங்கள் ஊரில் உள்ள தபால் நிலையத்தில் புகாரளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் உங்கள் பகுதி அஞ்சல்துறை பணியாளரிடம் இதழைத் தவறாமல் விநியோகிக்கும்படி கோரவும்.*

***– கண் ஒளி' ஆசிரியர் குழு.***

# கண் தானம் செய்த வள்ளல்கள்

## அரவிந்த் – திருநெல்வேலி

### அக்டோபர்-2017

வேலுச்சாமி (76) - தியாகராஜநகர்.
ரெங்கசாமி (68) - சிவகாசி.
வேலுச்சாமி (68) - சிவகாசி.
சந்திரபிரபா (65) - சிவகாசி.
குருவுத்தாய் (70) - சிவகாசி.
ராமானுஜ நாயக்கர் (62) - சிவகாசி.
லட்சுமிதாய் (68) - சிவகாசி.
ராமையா (66)- சிவகாசி.
கருப்பையா (75) - சிவகாசி.
கருப்பசாமி நாடார் (81) - சிவகாசி.
லில்லி புஷ்பம் (75) - சிவகாசி.
சேர்மகனி (63) - சிவகாசி.
விஜயபாலாஜி (39) - சிவகாசி.
பழனிவேல் (64) - சிவகாசி.
சண்முகத்தாய் (70) - சிவகாசி.
சஞ்சீவ்குமார் (62) - சிவகாசி.
மாரியப்பன் (62) - சிவகாசி.
வேல்தாய் (58) - சிவகாசி.
கந்தசாமி (70) - சிவகாசி.
ராமச்சந்திரன் (59) - சிவகாசி.
நாகேந்திரன் (62) - சிவகாசி.
பெருமாள்சாமி (68) - சிவகாசி.
குணசேகரன் (54) - சிவகாசி.
ஞானசுந்தரி (80) - திருநெல்வேலி.
எஸ்தர் (72) - தென்காசி.
காங்கிரஸ் பொன்பாண்டியன் (70) - தென்காசி.
புஷ்பம் (73) - தென்காசி.
கனகம்மாள் (78) - பாவூர்சத்திரம்.
அமலோற்பவம் (75) - பாவூர்சத்திரம்.
தாழம்பூ (65) - பாவூர்சத்திரம்.
முருகேசன் (67) - பழையபேட்டை.
அர்ஜீன் ராஜா (73) - இராஜபாளையம்.
வேலம்மாள் (82) - கோவில்பட்டி.
பொன்பாண்டியன் (77) - கோவில்பட்டி.
ராமையா நாடார் (93) - கோவில்பட்டி.
சீனியம்மாள் (68) - கோவில்பட்டி.
ஜானகியம்மாள் (83)-கோவில்பட்டி.
கோமதியம்மாள் (90)-கோவில்பட்டி.
செல்வம் சேவியர் (87)-தூத்துக்குடி.

### நவம்பர்-2017

ஹரிஹரன் (41) - சிவகாசி.
விஜயசுந்தரி (54) - சிவகாசி.
வேலுச்சாமி (58) - சிவகாசி.
ஜேசுராஜா (63) - சிவகாசி.
முத்துராஜ் (41) - சிவகாசி.
ராஜகனி (60) - சிவகாசி.
சுந்தரவல்லி (13) - சிவகாசி.
ரத்தினத்தாய் (71) - சிவகாசி.
ஜெகதீசன் (61) - சிவகாசி.
சின்னம்மாள் (69) - சிவகாசி.
சுசீலா (76) - சிவகாசி.
இராமகிருஷ்ணன் (56) - சிவகாசி.
சீனிவாசன் (68) - சிவகாசி.
ருக்குமணி (65) - சிவகாசி.
ராஜேந்திரன் (54) - சிவகாசி.
ராஜசேகர் (46) - சிவகாசி.
அங்கப்பன் (89) - திருநெல்வேலி டவுண்.
பொதிகாசலம் நாடார் (68) - தென்காசி.
ஜெயபாண்டியன் (82) - நாசரேத்.
சாரதா நாராயணசாமி (86) - கல்லிடைகுறிச்சி.
வேதமுத்து செல்லபாண்டி (81) - பாவூர்சத்திரம்.
ராஜம்மாள் (84) - ஆவடையானூர்.
திருப்பதி நாடார் (75)-கோவில்பட்டி.
பொன்னம்மாள் (90) - கோவில்பட்டி.
கிருஷ்ணசாமி (90) - கோவில்பட்டி.
மந்திரமூர்த்தி (55) - கோவில்பட்டி.
தங்கரத்தினம் (80) - கீழப்பாவூர்.
சிவகாமி சுந்தரியம்மாள் (80) - தூத்துக்குடி.
அற்புதமணி (75) - தூத்துக்குடி.
கடற்கரை (65) - சத்திரப்பட்டி.

**2018 ம் ஆண்டில் ஜூலை மாதம் (25.07.18 வரை) நமது ரோட்டரி அரவிந்த் அகில உலக கண் வங்கி மூலம் கண்களைத் தானமாகப் பெற்று கண்ஒளி பெற்றவர்களின் எண்ணிக்கை: 702.**

கண்தானம் செய்வதற்கு எந்த வயதுவரம்பும் இல்லை. அதைப் பற்றிய விழிப்புணர்வை அளிக்கவே கண்தானம் செய்தவர்களின் வயதையும் குறிப்பிட்டுள்ளோம்.

கண்தானம் பற்றி தகவல் தெரிந்துகொள்வதற்கு, தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

**அரவிந்த் கண் வங்கிகள்:**
மதுரை – 0452–435 6100
திருநெல்வேலி – 0462–4356100
கோயம்புத்தூர் – 0422–4360400
பாண்டிச்சேரி – 0413–2619100

**அரவிந்த் கண் சேகரிப்பு மையங்கள்:**
திண்டுக்கல் – 0451–2448100
தேனி – 04546–252658
சேலம் – 0427–2356100

**அரவிந்த் கண்தான மையம்**
கும்பகோணம் – 98428 20007

**கூடுதல் விவரங்களுக்கு:**
www.aravind.org/default/servicescontent/Eyebanks

*Owned and published by Dr. G. Natchiar from Aravind Eye Hospital, 1, Anna Nagar, Madurai - 625 020 and Printed by N. Seshadri at Graphico, No, 172, Vakil New Street, Simmakkal, Madurai - 625 001. Editor: Dr. G. Natchiar / Annual Subscription Rs.25/-*

# கண்தானம் | எளிய அறிமுகம்

ஆண், பெண். மூன்றாம் பாலினத்தினர் என அனைவரும் எல்லா வயதினரும் கண்தானம் செய்யலாம்.

இறந்தபின் கண்களை எடுப்பதால் முகம் விகாரமாகவோ முகத்தோற்றத்தில் மாறுதலோ ஏற்படாது.

கண்தானம் பற்றிய விழிப்புணர்வானது நமது சமூகத்தில் இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ளது.

கண்வங்கி நிபுணர் குழுவானது கண்தானம் செய்பவர்களின் இடத்திற்கே சென்று கண்களைப் பெற்றுச் செல்வார்கள்.

கருவிழி மாற்று அறுவை சிகிச்சையை மத்திய, மாநில அரசுகள் அங்கீகரித்துள்ளன.

கண் கண்ணாடி அணிந்திருந்தவர்களும் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களும் கண்தானம் செய்யலாம்.

இந்தியாவில் கருவிழி நோயால் பார்வை இழந்தவர்கள் 10 லட்சம் பேர்.

கண்ணில் காயங்கள், நோய் கிருமிகளால் தாக்கப்படுதல், விபத்துகள் மற்றும் பரம்பரையாக வரும் நோய்கள் காரணமாக கருவிழி நோய் ஏற்பட்டு பார்வையிழப்பு உண்டாகும். கருவிழி நோயால் பார்வை இழந்தவர்களுக்கு கண்தானம் மூலம் பெறப்படும் பார்வை ஒன்றே தீர்வு.